இரண்டாவது தேர்ச்சி :
முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக வாழ்வர்

11

## 2.4 இல்லத் திருச்சபை



✞ யேசு, மரியா, சூசை, அதாவது திருக்குடும்பம் இறைவனில் கொண்ட அளவு கடந்த அன்பினால் தமது குடும்பத்தில் மட்டுமன்றி சகோதர சமூகத்துடனும் நெருங்கிய உறவு கொண்டு, உதவி புரிந்து வாழ்ந்த விதம் மிகவும் மேன்மையானதாகும்.

✞ சமூகத்தில் எளிமையாக வாழ்ந்து தாம் கூறிய, செய்த அனைத்திலுமே இறை விருப்பத்தை அறியும் ஆவல் திருக்குடும்பத்தில் இருந்ததை நாம் அறிவோம். இதனால் அக் குடும்பத்தில் பிறந்த யேசுவும் முழுமையின் வடிவாய் இருந்ததை கீழ்க்காணும் விவிலியப் பகுதி விளக்குகிறது.

இயேசு ஞானத்திலும் உடல்வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.

லூக். 2:52

இறைவார்த்தையில் வாழ்ந்து திருக்குடும்பத்தை முன்மாதிரிகையாகக் கொண்ட நற்குடும்பம் ஒன்றின் பின்னணியை எமது இல்லத்திலே கட்டியெழுப்பும் விதத்தைப் பார்ப்போம்.


மூவொரு இறைவனின் அன்பும் முன்மாதிரிகையும்







கிறிஸ்தவ குடும்பத்தில் செயற்படுகிறது.






இத்தகைய அன்பின் வாழ்வில் இவ்வுலகத்தையும் வாழ்வையும் வெற்றி கொள்வதற்கு கணவன்-மனைவிக்கு, பெற்றோர்-பிள்ளைகளுக்கு இறைவன் வெவ்வேறு விதத்தில் அறிவுறுத்தல் அளிக்கிறார்.

திருமணம் என்னும் அருளடையாளத்தைப் பெற்று இறை அருளில் நிறைந்து அன்பில் இணையும் குடும்பம் இறக்கும் வரை அவ்வாறு வாழ்வதற்கு உறுதியளிக்கின்றனர். வாழ்க்கைப் பயணத்திலே சவால்களுக்கு வலிமையுடன் முகம் கொடுக்க வாக்குறுதியளிக்கின்றனர்.

கணவருக்கும் மனைவியருக்கும் அறிவுரை:

திருமணமான பெண்களே, உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள். இதனால், அவர்களுள் சிலர் கடவுளுடைய வார்த்தையை ஏற்காதிருந்தாலும் மரியாதையுடைய உங்கள் தூய நடத்தையைக் கண்டு, கவரப்பட்டு நல்வழிப்படுத்தப்படுவர். அப்போது வார்த்தையே தேவைப்படாது. முடியை அழகுபடுத்துதல், பொன் நகைகளை அணிதல், ஆடைகளை அணிதல் போன்ற வெளிப்படையான அலங்காரமல்ல, மாறாக, மனித உள்ளத்தில் மறைந்திருக்கும் பண்புகளாகிய பணிவும் அமைதியுமே உங்களுக்கு அழியாத அலங்காரமாய் இருக்கட்டும். கடவுள் பார்வையில் அதுவே விலையுயர்ந்தது. முற்காலத்தில் கடவுள்மேல் நம்பிக்கை கொண்டிருந்த தூய பெண்களும் இவ்வாறுதான் தங்களை அணி செய்து கொண்டார்கள்: தங்கள் கணவருக்குப் பணிந்திருந்தார்கள். அவ்வாறே, சாரா ஆபிரகாமைத் 'தலைவர்' என்றழைத்து அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தார். நீங்களும் நன்மை செய்து, எவ்வகை அச்சுறுத்தலுக்கும் அஞ்சாதிருப்பீர்களென்றால் சாராவின் புதல்வியராய் இருப்பீர்கள்.அவ்வாறே, திருமணமான ஆண்களே, உங்கள் மனைவியர் வலுக்குறைந்தவர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து, அவர்களோடு இணைந்து வாழுங்கள். வாழ்வுதரும் அருளுக்கு உடன் உரிமையாளராக இருப்பதால் அவர்களுக்கு மதிப்புக் கொடுங்கள். அப்போதுதான் நீங்கள் தடையின்றி இறைவேண்டல் செய்ய முடியும்.

1 பேதுரு 3: 1 - 7

திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். ஏனெனில் கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தி, அதற்காகத் தம்மையே ஒப்புவித்தார். வார்த்தையாலும் நீரினாலும் அதனைக் கழுவித் தூயதாக்குமாறு இவ்வாறு செய்தார். அத்திருச்சபை, கறை திரையோ, வேறு எக்குறையோ இல்லாமல் தூய்மையும் மாசற்றதுமாய் மாட்சியுடன் தம்முன் விளங்குமாறு இப்படிச் செய்தார். அவ்வாறே கணவர்களும் மனைவியரைத் தம் சொந்த உடல் எனக் கருதி அன்பு செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தம் மனைவியின்மீது அன்பு கொள்கிறவர், தம்மீதே அன்பு கொள்கிறவராவார். தம்முடைய உடலை எவரும் வெறுப்பதில்லை. அதைப் பேணி வளர்க்கிறார். அவ்வாறே, கிறிஸ்துவும் திருச்சபையைப் பேணி வளர்த்து வருகிறார். ஏனெனில் நாம் அவரது உடலின் உறுப்புகள். ''இதனால் கணவர் தம் தாய் தந்தையை விட்டுவிட்டு ஒன்றித்திருப்பார்: இருவரும் ஒரே உடலாயிருப்பர்'' என மறைநூல் கூறுகிறது. இதில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன்.

எபேசி 5: 25 - 32


இலவச விநியோகத்திற்காக

இதன் அடிப்படையில் பெற்றோர்கள் பின்வருவனவற்றிற்காக விசேட அழைப்பைப் பெறுகிறார்கள்:

- நல்ல பிள்ளைகளை உலகிற்கு தருவதற்கு
- விசுவாசத்தின் வழியாக அவர்களை நிறைவு பெறச் செய்வதற்கு.
- தூய்மையில் பங்கு கொள்வதற்கு
- மற்றவர்களில் நம்பிக்கையும் மதிப்பும் கொண்டு வாழ்வதற்கு
- கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு சான்று பகர்வதற்கு
- அனைவரையும் எல்லா இடத்திலுமே இறைவனை அனுபவித்து வாழ அழைப்பதற்கு.
- உலகை விருத்தி செய்வதற்கு
- யேசுவைப் பின்பற்றி மனித சமூகத்தை மகிழ்ச்சிப்படுத்துவதற்கு
- பகிர்ந்து கொள்ளும் இயல்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு
- ஒளியாக, உப்பாக வாழ்வதற்கு
- மற்றவர்களோடு ஒற்றுமையாயிருந்து ஒத்துழைப்பதற்கு

✡ உமது பெற்றோரில் உண்மையான அன்பு கொண்டு வாழ்வதற்கும் வாழ்வில் சரியான பாதையைத் தேர்ந்து கொள்வதற்கும் தேவையான வரம் கேட்டு செபம் ஒன்று எழுதுக.

**நல்ல குடும்பத்தில்**

நல்ல குடும்பத்தில் இறைவன் - தனது
இல்லம் அமைப்பான் - அந்த
இல்லம் உருவாக நமது உள்ளங்கள்
உறுதி கொள்ளட்டுமே

குடும்ப நலன்பேண வேண்டும் - நல்ல
கொள்கை உருவாக வேண்டும்
அறிவோடு வாழும் உலகம் - நெஞ்சில்
அன்போடு வாழ வேண்டும்

வளர்கின்ற உலகம் தன்னை - இன்று
உருவாக்கும் பள்ளிக் குடும்பம்
வளமோடு வாழ வேண்டும் - நல்ல
வரலாறு சொல்ல வேண்டும்.

## பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்கு அறிவுரை

- இறைவன் பெற்றோருக்கு அளிக்கும் உன்னத பரிசு பிள்ளைகள்.
- பிள்ளைகளை பெற்றெடுப்பது மட்டுமன்றி அவர்களை இறைவனுக்கேற்ப வளர்க்கவும் அவர் பெற்றோருக்கு அறிவுரைகள் அளிக்கிறார்.

உனக்குப் பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு நற்பயிற்சி அளி: இளமைமுதலே பணிந்திருக்கச் செய். உனக்குப் பெண் பிள்ளைகள் இருந்தால், அவர்களது கற்பில் அக்கறை காட்டு: அவர்களுக்கு மிகுதியாகச் செல்லம் கொடுக்காதே. உன் மகளுக்குத் திருமணம் செய்துவை: உன் தலையாய கடமையைச் செய்தவன் ஆவாய். அறிவுக்கூர்மை படைத்தவருக்கே உன் மகளை மணமுடித்துக்கொடு.

சீராக் 7 : 23 - 25

தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி வளர்த்துவாருங்கள்.

எபேசி 6:4

- ♦ பிள்ளைகள் தொடர்பாக பெற்றோருக்கு அளிக்கப்பட்டிருக்கும் பொறுப்புகளை சரியாக நிறைவேற்ற வேண்டுமாயின் அவர்களை தினமும் திருவிவிலியத்தை வாசித்து தியானிக்க செய்ய வேண்டும். தம்முடனும் பிள்ளைகளுடனும் இறைவன் பேசும் விதத்தை அறிந்து அதன்படி வாழ வேண்டும்.
- ♦ அதன்படி வாழ்வதற்கு வரம் கேட்டு, தூய ஆவியின் வழிகாட்டல் வேண்டி செபிக்க வேண்டும்.
- ♦ அவ்வாறாயின் இவ்வுலக வாழ்வை வெற்றி கொள்வது மட்டுமன்றி நித்திய வாழ்வையும் பெற்றுக் கொள்ள முடியும்.

செயற்பாடு

- ♦ உங்களுக்காகத் தம்மையே தந்து உழைக்கும் பெற்றோர் மட்டில் உங்களின் கடமை யாது?
- ♦ எவ்வாறு உங்களின் அன்பை பெற்றோருக்கு காட்டவும், அந்த பொறுப்பை நிறைவேற்றவும் முடியும்?
- ♦ உங்கள் நண்பனும் இதே போன்று செயற்படுவதற்கு எவ்வாறு உதவுவீர்?

## பெற்றோர் மட்டில் பிள்ளைகளுக்கு அறிவுரை

பத்துக் கட்டளைகளில் நான்காம் கட்டளை இது

> பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. ''உன் தந்தையையும் தாயையும் மதித்து நட'' என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. ''இதனால் நீ நலம் பெறுவாய்; மண்ணுலகில் நீடுழி வாழ்வாய்'' என்பதே அவ்வாக்குறுதி.
>
> எபேசி 6:1-3

> உன் தந்தையை உன் முழு உள்ளத்துடன் மதித்து நட; உன் தாயின் பேறுகாலத் துன்பத்தை மறவாதே. அவர்கள் உன்னைப் பெற்றெடுத்தார்கள்; அதற்கு ஈடாக உன்னால் எதையும் செய்ய முடியாது என்பதை நினைவில் இருத்து.
>
> சீராக் 7 :27-28

- பெற்றோர் மட்டில் பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இறைவன் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தியுள்ளார்.

- பிள்ளைகளுக்கான பெற்றோரின் அர்ப்பணிப்புச் செயற்பாடு எல்லையற்றது என விளக்கப்பட்டுள்ளது.

- அதுமட்டுமன்றி அந்த அறிவுரைக்கேற்ப வாழ்வதன் பிரதி பலன் காட்டப்பட்டுள்ளது.

- இவை அனைத்தின் வழியாகவும் இறைவன் தன் பிள்ளைகளில் கொண்டுள்ள எல்லையற்ற அன்பு வெளிப்படுத்தப்படுகிறது.

- ஆசிரியரின் உதவியுடன் இத்தகைய இறை வார்த்தைகளைத் தேடியறிந்து அவற்றின் மூலம் உமது வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய செய்திகளை எழுதுக.

- பெற்றோருக்கு கீழ்ப்படியாத உமது நண்பன் ஒருவனை நல்வழிப்படுத்த நீர் மேற்கொள்ளும் செயற்பாடுகளை எழுதுக.

கிறிஸ்தவ திருமணம் பற்றிய பரிசுத்த திருச்சபையின் வழிகாட்டலோடு அதனைத் தூய்மையாக்கிக் கொள்ள அர்ப்பணிப்பர்.

ஒரு ஆணும் பெண்ணும் தம்மிடையே ஏற்படுத்திக் கொள்ளும் அன்னியோன்னிய வாழ்வும் அன்பும் திருமண உடன்படிக்கையாக அமைகின்றன. திருமண வாழ்வு அதற்குரிய சிறப்பான நியதிகளுடன் இறைவனால் தொடக்கிவைக்கப்பட்டது. திருமண அமைப்பும் திருமண அன்பும் தம் இயல்பிலே தம்பதியினரின் நலனுக்காகவும் பிள்ளைகளைப் பெற்றுப் பயிற்றுவிப்பதற்காகவும் அமைந்துள்ளன. திருமுழுக்குப் பெற்றவரிடையே திருமணத்தை கிறிஸ்து ஓர் அருளடையாளமாக உயர்த்தினார்.

**கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி# 1660**

திருமண உடன்படிக்கையை இறைவனே ஏற்படுத்தினாரென்றும் கிறிஸ்து அதனை பரிசுத்த அருளடையாளமாக உயர்த்திய விதமும் இங்கே காட்டப்படுகிறது.

- ♦ கிறிஸ்தவ குடும்பம் எவ்வாறாக அமைய வேண்டும் என கீழே காண்பதற்கேற்ப விளக்கவும்.

கிறிஸ்தவ குடும்பமே விசுவாச அறிக்கையை பிள்ளைகள் முதன் முதலில் பெற்றுக்கொள்ளும் இடமாகும். இதனால் குடும்பம் இல்லத்திருச்சபை எனவும், இறை அருளினதும் செபத்தினதும், குழுமமாகவும், மனித புண்ணியங்களினதும், கிறிஸ்தவ அன்பினதும் பள்ளி எனவும் தகுந்த முறையில் அழைக்கப்படுகின்றது.

**கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி# 1666**

திருமணம் என்னும் அருளடையாள வாழ்வில் பிரவேசித்து மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் வாழ்வதற்கான வழி காட்டல் கீழே காணப்படும் வாசகத்திலே காட்டப்படுகிறது.

அருளடையாளங்களைப் பெறுவதிலும்
இறை வேண்டலிலும் நன்றி செலுத்துவதிலும்,
தம் தூய வாழ்வின் சான்றிலும்
ஒறுத்தலிலும் அன்பைச் செயலில் காட்டுவதிலும்
தந்தை, தாய் பிள்ளைகள், ஏனைய குடும்ப உறுப்பினர்கள்
தம் அரசத் திருப்பணி நிலையை சிறப்பான முறையில்
செயல்படுத்துகின்றனர் (2ம் வத். திருச்சபை 10).
எனவே குடும்பம் கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பள்ளி எனலாம்.
அவ்வாறே குடும்பம் மனிதப் பண்பை வளமுறச் செய்கின்ற
ஒரு பள்ளி எனலாம். இங்கு ஒருவர் பொறுமை, உழைப்பில்
மகிழ்ச்சி, சகோதர அன்பு, தாராள மனம், மன்னிப்பு,
ஆகியவற்றையும், அனைத்திற்கும் மேலாக செபத்தில் இறைவனை
வழிபடவும் தம் வாழ்வை அர்ப்பணிக்கவும் பயிலுகிறார்.

**கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி# 1657**

## செயற்பாடு

உமது வீட்டிலே உண்மை அன்பு, மகிழ்ச்சி, ஆறுதல் ஆகியவற்றை அனுபவிக்க எவ்வாறு செயற்படுவீர் என விளக்குக.

குடும்ப மறைக்கல்வி மிகமிக இன்றியமையாதது.
கிறிஸ்தவக் குடும்பம் எந்த அளவுக்கு நற்செய்தியை ஏற்று
விசுவாசத்தில் முதிர்ச்சியடைகின்றதோ, அந்த அளவுக்கு
அது நற்செய்தி அறிவிக்கும் சமூகமாக மாறுகின்றது.
திருத்தந்தை 2வது அருள் சின்னப்பர்
''குடும்ப வாழ்வு'' சுற்றுமடல்

## வாழ்க்கைக்கு

எமது குடும்பத்தை எதிர்நோக்கில்
முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவ குடும்பமாக,
நற்செய்தியை பறைசாற்றும்
சமூகமாக மாற்றுவோம்.